ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1775/22 - 2012 සැප්තැම්බර් මස 14 වැනි සිකුරාදා - 2012.09.14

1775/22 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச.வ.- பீ. 21/78 (VIII).

### 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 24அ ஆம் பிரிவின் 2 ஆம் உட்பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அதன் 18 ஆம் பிரிவின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட கட்டளைச் சட்டம்.

செயலாளர்,
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.

கொழும்பு,
2012, செத்தெம்பர் 05.

கட்டளைச் சட்டம்

1. இக்கட்டளைச் சட்டம் 1996 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பட்டப்பின்படிப்பு அறிவியல் நிறுவகம் (திருத்தக் கட்டளைச் சட்டம்) என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் 2012 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 25 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. 1996 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 9 ஆந் திகதிய 909/13 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1996 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பட்டப்பின்படிப்பு அறிவியல் நிறுவகக் கட்டளைச் சட்டம், அதன் 9 ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது :-

"9. (இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) முகாமைச் சபை, நிறுவகத்தின் கல்விசார் மற்றும் நிறைவேற்றுக் குழுவாகப் பணியாற்றுதல் வேண்டுமென்பதுடன், பின்வரும் ஆட்களைக் கொண்டிருத்தலும் வேண்டும் :-

(1) பின்வரும் பதவிவழி உறுப்பினர்கள், அதாவது -

(அ) பணிப்பாளர் ;

(ஆ) உயர்கல்வி என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்படுகின்றதோ அந்த அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அத்தகைய செயலாளரின் நியமத்தர் ;

(இ) நிதி என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்படுகின்றதோ அந்த அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அத்தகைய செயலாளரின் நியமத்தர் ;

(ஈ) அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்படுகின்றதோ அந்த அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அத்தகைய செயலாளரின் நியமத்தர் ;